கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

மாசி மாத இதழ்
NEWS BULLETIN
FEBRUARY 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
29/03/25	தமிழ்ப் பேச்சுப் பரீட்சை
12/04/25	தமிழ் எழுத்து, வாசிப்பு, கேட்டல் பரீட்சைகள்

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri teacher)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.00pm – 2.00pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Tamil	11.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	10.00am – 12.00am
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am





45 Blondvil St

தைப்பொங்கல் கொண்டாட்டம்

01/02/2025 அன்று ஏழிசைக் குழுமம் நடாத்திய பொங்கல் கொண்டாட்டத்தில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தனர்.

தமிழாசிரியைகள் திருமதி ரஜனி உதயசேகரன், திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் ஆகியோரின். நெறியாள்கை, மற்றும் தலைமையில் தரம் 8, சாதாரண தர (O/L) மற்றும் உயர்தர (A/L) மாணவர்கள் வழங்கிய "தரணிபோற்றும் தைத்திங்கள்" கவியரங்கம்,



.

தமிழாசிரியை திருமதி ரஜனி யேசுராசா அவர்களின் நெறியாள்கையில் தரம் 5, 6 மாணவர்கள் வழங்கிய "கல்வியா செல்வமா வீரமா" நாடகம்,



நடன ஆசிரியை "பரதக்கலாவித்தகர்" "நாட்டிய கலாநிபுண", "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளின் நடன நிகழ்வு,





நடன ஆசிரியை “நாட்டிய கலாநிபுண”, “நுண்கலைமானி” ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளின் நடன நிகழ்வு ஆகியவை அரங்கேறின.



சிவராத்திரி

கொவன்றீஸ்வரம் சிவாலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற சிவராத்திரி தினத்தன்று, கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர். சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான “நுண்கலைமானி” ஸ்ரீமதி வானதி சுரேஸ்குமார் அவர்களின் மாணவிகள் பாடலையும்,



நடன ஆசிரியைகளில் ஒருவரான “நாட்டிய கலாநிபுண”, “நுண்கலைமானி” ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகள் நடன நிகழ்வுகளையும் வழங்கியிருந்தனர்.







கதம்பம் பல்சுவை நிகழ்வு

WORLD PEACE & HARMONY அமைப்பினால் பிரதி வியாழக்கிழமைகளில் இணைய வழியில் நடைபெறும் கதம்பம் பல்சுவை நிகழ்வில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் இணைந்து தியானம் செய்வதோடு, கலை நிகழ்வுகளையும் வழங்கி வருகின்றனர்.

அந்த நிகழ்வினை மிகவும் சிறப்பான முறையில் நடாத்திவருகின்ற திரு ஸ்ரீகாந்தராஜா ஐயா, அருந்ததி அம்மா மற்றும் பலர் 22/02/2025 அன்று தமிழ்ப் பாடசாலைக்கு வருகைதந்து, தியான முறைகளைப் பற்றிய தகவல்களை நேரடியாக வழங்கியிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



ஒவ்வொரு சனிக்கிழமை காலையும் தமிழ்ப் பாடசாலை ஆரம்பிக்க முன்னர் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் 10 நிமிடங்கள் இணைய வழியில் இவர்களுடன் தியானம் மூலம் இணைந்து கொள்கிறார்கள்.

06/02/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில் சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் விஷால் காண்டீபன் சுரத்தட்டு இசையையும், வீணை மற்றும் வயலின் ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி மோனிகா ஜெய்கணேஷ் வீணை இசையையும் வழங்கியிருந்தனர்.





13/02/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில் சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அஜய் ஜெயக்காந்தன் சுரத்தட்டு இசையையும், வீணை மற்றும் வயலின் ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி மோனிகா ஜெய்கணேஷ் வீணை இசையையும் வழங்கியிருந்தனர்.





தமிழாசிரியை திருமதி ரஜனி யேசுராசா அவர்கள் "உணர்வுகொள் தமிழா" என்னும் தலைப்பில் கவிதையை வழங்கியிருந்தார்.




20/02/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில் செல்வன் மதீரன் சௌந்தரராஜன் "தமிழ்மொழி" என்னும் தலைப்பில் கவிதையையும், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் லக்ஸன் திருவரங்கன் சுரத்தட்டு இசையையும், வழங்கியிருந்தனர்.





27/02/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில் சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் டிர்த்தீன் ஜெயதீஸ்வரன் சுரத்தட்டு இசையையும், சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான "கானகலாதர" "சங்கீத கலாநிபுண" "இசைவாணர்" தீனதயாளன் பத்மநாதன் அவர்களின் மாணவர்களான செல்வன் சித்தேஷ்வர் கௌரிசங்கர், செல்வன் சர்வேஷ்வர் கௌரிசங்கர் ஆகியோர் பாடலையும், வீணை மற்றும் வயலின் ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி Durga Gogulapati - Pahi Ramachandra வீணை இசையையும் வழங்கியிருந்தனர்.









பாராட்டி வாழ்த்துகின்றோம்

CAMBRIDGE GCSE தமிழ்ப் பரீட்சையை கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகத்தின் ஊடாகத் தோற்றி, உலகிலேயே அதியுயர் புள்ளிகளைப் பெற்று முதலாவது நிலையைப் (WORLD RECORD) பெற்ற செல்வன் முகமட் சாஹீம் முகமட் சார்டீன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.





ஈழத்துப் புலமைகள் (பாகம் 26)

கடந்த இதழிலே காரை நகர் கார்த்திக்யப் புலவரது புலமையும் ஆளுமையும் பற்றிப் பார்த்திருந்தோம்.

இவ்விதழிலே!
உடுவில் பகுதியில் சந்திர சேகர மாப்பாணர் வழிவந்த அம்பலவாணபிள்ளை யவர்களின் மகனாக பிறந்த முத்துக் குமார கவிராயர் அவர்களைப் பற்றிப்பார்ப்போம்.
சிறந்த கல்விமானும்,சென்னை மாகாண நீதிபதியாக இருந்தவருமான சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் தமிழ்க்குருவாக இருந்து பயிற்றுவித்தவர். சி.வை.தாமோதரம்பிள்ளையவர்கள் எழுதிய நஅனைத்து நூல்களிலும் குரு வணக்கமாக முத்துக்குமாரக்கவிராயர் மீது ஒரு செய்யுள் எழுதியிருப்பார். அவற்றுள் ஒன்றினைப்பார்ப்போம்.

" திங்கள் தங்கிய செஞ்சடை முடியினன் றிருந்தாட
பங்கயங் கயிலாய நாதனை முனிப்பாழிச்சிச்
சங்க மங்களத் தமிழ் முத்துக்குமாரன்றன் மலர்ப்பா
த்ங்கள் வங்கமா தமிழ்க்கடலிடைப் படிகுவனே"

அக்காலத்திலே மதப்பிரசாரங்களும்,மத மாற்றங்களுமதிகம் இடம்பெற்றன.அந் நேரத்திலே

" யேசு மத பரிகாரம்" "ஞானக்கும்மி" எனும் புத்தகங்களை எழுதிவெளியிட்டார் முத்துக்குமார கவிராயர்.
"ஞானக்கும்மி" எனும் நூலை எதிர்த்து "அஞ்ஞானக்கும்மி" எனும் நூலை கிறிஸ்தவர் ஒருவர் எழுதி வெளியிட்டாராம்.தனால் சீற்றமடைந்த சிவம்பு நாதபிள்ளை எனும் கவிஞரஞ்ஞானக்கும்மி மறுப்பு எனும் நூலை எழுதி வெளியிட்டாராம்.

அக்காலம் தொடங்கிய கண்டன எழுத்துப்போர் ஆறுமுக நாவலர் வரை தொடர்ந்ததை காணக் கூடியதாக உள்ளது.ஆறுமுக நாவலரே மிக அதிகமாகன கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.
நிற்க,
கவிராசரால் பல தனிப்பட்ட பாடல்களும்
பாடப்பட்டுள்ளது.அக்கவிதைகள்,அப்போது தொகுத்து வைக்கப் படவில்லை.பிற்காலத்திலே,அக்கவிதைகளை செவிவளியாக கற்று வந்தோரிடமிருந்து கேட்டறிது ,புத்தகமாக வெளியிட்டவர் சுன்னாகம்குமாரசுவாமி புலவராவர்..புலவரவர்கள் " முத்தக பஞ்ச விஞ் சதி" எனும் பெயரில் வெளியிட்டுள்ளார்.
இவற்றில் பல கவிதைகள் நல்லை கந்தன் மீதும்,மாவைக்கந்தன் மீதும் தில்லை நடராசர் மீதும் பாடப்பட்டுள்ளன.

நல்லை நகர் முருகன் மீது பாடப்பட்டுள்ள செய்யுள் ஒன்றினைக்காண்போம்.

" மல்லாக மாதகலான் மருகன்சுன் நாகத்தான்
மகன் பாவாணர்
சொல்லாச்சீ ரீவினையான் துன்னாலை யானந்தன்
சுரும்பரோதிச்
சில்லாலையிருள் வென்ற குறக்கொடிகாமத்தானை
சிகண்டிமாவூர்
வல்லானை மவிட்டபுர நகரத் திடைப் பவனி
வக்கண்டேனே"

(மீதி அடுத்த இதழில்.)

ஆக்கம்
திரு தவத்துரை மாணிக்கம் ஆசிரியர்





